[1973 டிசம்பர் 4

Ayacuts under Karungal Distributory Channel.

* 610 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to prevent the crops of the newly converted areas of Chittar-Pattanamkal Scheme coming under the Karungal Distributory frequently withering away due to insufficient supply of water ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இங்கு பயிர்கள் சாவியாகப் போவதற்கான முக்கிய காரணங்களாவன—

ஆயக்கட்டுப் பகுதி நீண்டு குறுகலாயிருப்பதால் நீண்ட தொலைவுக்கு வாய்க்கால்களை வெட்டி நீரைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் அப்பகுதியிலுள்ள நிலம் நீரைக் தேக்கி வைக்கும் திறன் மிகக் குறைந்த மணற்பாங்கான நிலமாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆயக்கட்டுப்பகுதியில் அவசியமான மண்வள ஆய்வையும், அங்கு பயிரிடப்படும் பல்வேறு வகைப் பயிர்களுக்குரிய நீர்த்தேவைகளை சரியாக மதிப்பிடுவதற்குரிய சோதனைகளையும் நடத்திய பின்னர் அப்பகுதியில் விளைவிப்பதற்கேற்ற பயிர்கள் இவையென்று தெரிவிக்குமாறு வேளாண்மைத்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தொடர்ந்து இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னரும் இங்கு இவ்விதமான நிலைமை இருக்கிறது என்று எடுத்துக் கூறப்பட்ட போது தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனாலும் வாட்டர் டாக்ஸ் வசூலிக்கப்படுகிறது. இது டபிள் பனிஷ்மென்ட் போல் இருக்கிறது. தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும்படி வசதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 41-வது விதியின்கீழ் இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே விவரமாக அறிக்கை தருகிறேன்.